**செ. கு. எண்:133** **நாள்: 18.09.2017**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 18.9.2017

கடலூர் மாவட்டம், கடலூர் வட்டம், அரிசிபெரியாங்குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கலியபெருமாள் என்பவரின் மகன் திரு. சிவா என்பவர் மின் கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி **28.7.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், காரியாபட்டி வட்டம், க.செவல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. லெட்சுமணண் என்பவரின் மகன் திரு. பழனிச்சாமி என்பவர் மின் கம்பத்தில் ஏறி பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட மின் கசிவினால், மின்சாரம் தாக்கி **29.7.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், கூடலையாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் என்பவரின் மகன் திரு. வீராசாமி என்பவர் மின் கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி **2.8.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், ஸ்ரீமுஷ்ணம் வட்டம், மருங்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. ராஜவேல் என்பவரின் மகன் திரு. ராஜபாலன் என்பவர் மின் கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி **2.8.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், ஓட்டப்பிடாரம் வட்டம், பசுவந்தனை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மகன் செல்வன் அழகு செல்வம் என்பவர் **10.8.2017** அன்று விளையாடிக்கொண்டிருந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், செங்குறிச்சி மாமரத்துப்பட்டியைச் சேர்ந்த திரு. மலையாண்டி என்பவரின் மகன் திரு. தங்கராஜ்

என்பவர் மின் கம்பத்தில் ஏறி பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மின்சாரம் தாக்கி 10.8.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், ஒழுகரை மதுரா ஓங்கூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. எட்டியப்பன் என்பவரின் மகன் திரு. சங்கர் என்பவர் தனது விவசாய நிலத்திற்கு சென்ற போது, அறுந்து கிடந்த மின் கம்பியினை மிதித்ததில், மின்சாரம் தாக்கி 14.8.2017 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த ஏழு நபர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்த ஏழு நபர்களின் குடும்பத்திற்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**